**குடியேற்றக்காரர்களையும் அகதிகளையும் மனிதாபிமானம் என்ற சதுரங்க ஆட்டத்தில் அடமானம் வைத்துவிடக்கூடாது.**

- திருத்தந்தை பிரான்சிஸ்

நமது மத்தியிலும் வாழும் ஏழைகள் மீது பரிவு காட்டும் வகையில் இறையன்பை செயல்படுத்த வேண்டும். நம்மையே மறுத்து நமது சிலுவையைச் சுமந்து, நாம் வாழ்வதற்கு தமது உயிர் கொடுத்த கிறிஸ்துவின் பாதையைப் பின்பற்றுமாறு மாற்கு 8:34&35 கேட்டுக் கொள்கிறது. நாம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பினால், அதனை இழந்து விடுவோம். கிறிஸ்துவின் பொருட்டு நமது உயிரை இழக்கும் நாம் அதைக் காத்துக் கொள்வோம்.

மோசமான, அசுத்தமான, அபாயகரமான சூழ்நிலையில் வேலை செய்யும் அந்நியக் குடியேற்றக்காரர்கள் உடல், உணர்வு, மன அளவில் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். கட்டுமான, தோட்டத் துறைகளில் அந்நியத் தொழிலாளர்கள் வெயில் போன்ற மோசமான சூழ்நிலையில் வாடுகின்றனர். அவர்களில் ஆயிரக்கணக்கானோர் ஆள்கடத்தப்படுகின்றனர். ‘கொங்சி’ என அழைக்கப்படும் தற்காலிக வீடுகளில் மிருகங்களைப் போல் அடைக்கப்படுகின்றனர். 12 மணி நேரத்திற்கு மேலாக வேலை செய்வதன் காரணத்தால் உறக்கத்திலேயே இறப்பவர்களும் உண்டு. வீட்டுப் பணியாளர் பலருக்கு ஒரு நாள் விடுமுறை கொடுப்பதில்லை, வெளியே செல்லும் சுதந்திரம் கொடுப்பதில்லை. அவர்களின் பாஸ்பார்டுகளை முதலாளிமார்களே வைத்துக் கொள்கின்றனர். இம்மாதிரியான சோகக் கதைகள் தொடருகின்றன.

அந்நியக் குடியேற்றக்காரர்கள் மீதான தப்பெண்ணத்தை அகற்றி, அவர்களை வரவேற்பதோடு அவர்களின் உரிமையையும் கௌரவத்தையும் பாதுகாக்க வேண்டுமென நம் ஒவ்வொருவரையும் திருச்சபை அழைக்கிறது. பொறுப்பேற்ற ஆள்சேர்க்கும் நிறுவனங்கள் அல்லது முதலாளிமார்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென அறைகூவல் விடுக்கப்படுகிறது. அவர்களுக்கு நியாயமான சம்பளமும் சுமூகமாக வேலை சூழ்நிலையும் கிடைக்கப்பட வேண்டும். நமது சுற்றுவட்டாரத்தில் அந்நியத் தொழிலாளர்கள் மோசமாக நடத்தும்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்வோமாக! முதலாளிமார்கள் என்ற முறையில் அந்நியத் தொழிலாளர்களின் சொந்த அடையாளப் பத்திரங்களை வைத்திருக்க அனுமதிப்போமாக! சுகாதாரம், வீட்டுவசதி,கல்வி போன்ற அடிப்படை வசதிகள் கிடைப்பதற்கும் அவர்களுக்கு சுதந்திரமும் வேலை வாய்ப்புகளும் நாம் வழங்குவோமாக! ✝

**வாரம் ஒரு வசனம்**

**செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம்**

INTERNAL CIRCULATION ONLY
BUL 37/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

16 செப்டம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 24ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் மற்றவர்களை மதிப்பது, உலகத்தோடு நட்புறவாடல்

# நம் மத்தியிலுள்ள அந்நியக் குடியேற்றக்காரர்களைப் பாதுகாத்தல்

சகோதர-சகோதரிகளே, இறைவார்த்தை இன்று நமக்கு சவால் விடுக்கிறது. செயலற்ற விசுவாசத்தால் என்ன பயன்? இம்மாதிரியான விசுவாசம் நம்மை மீட்காது. பசியால் வாடும் அல்லது ஆடையின்றி குளிரில் நடுங்கும் ஒரு சகோதர-சகோதரியிடம், “உங்கள் பசியும் குளிரும் நீங்கி நலமாக இருப்பீர்களாக” கூறி, உதவிக்கரம் நீட்டா விட்டால், அதனால் பயன் என்ன? எனவே செயலற்ற விசுவாசம் செத்த விசுவாசம் (யாக்.2:14-18).



## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் எல்லோருக்கும் மதிப்பளித்து உலகத்தோடு நட்புறவு கொள்ளுவோம்***

**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

### பங்கு அலுவலக நேரம்

திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் 24ஆம் ஞயிறு **சனி 15-09-2018 - ஞாயிறு 23-09-2018**

எசா: 50: 5-9a தி.பா: 114: 1-2, 3-4, 5-6, 8-9 யாக்கோபு: 2: 14-18 மாற்கு: 8: 27-35

**" உயிர் வாழ்வோர் நாட்டில், நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்" - திபா 114**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 15 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ஸ்டீபன்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 16 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (கு. நல் வா. புணி குழு)<br>திருப்பலி (ஆ) (மறை. கல்வி படி 2)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறமாட்டாது**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>( தமிழ் ) ( தே. மொ ) (சீனம் ) நடைபெறமாட்டாது<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) |
| திங்கள் | 17 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 19 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 20 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 21 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 25ஆம் ஞயிறு**

சா.ஞா: 2: 12a, 17-20 தி.பா: 53: 3-4, 5, 6, 8 யாக்கோபு: 3: 16- 4: 3 மாற்கு: 9: 30-37

**" என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்" - திபா 53**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 22 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித கிளாரா) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 23 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஜஸ்ரின்)<br>திருப்பலி (ஆ) (மறை. கல்வி குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம் செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறமாட்டாது**<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2018 செப்டம்பர் (புரட்டாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

1) பங்கு ஆலய காணிக்கை:
அ) 08/09 செப்டம்பர் ரிம: 9,428.00 தித்தி : ரி.ம 68.00
ஆ) கேரளா இயற்கைப் பேரழிவு நிதி: ரிம: 9,262.40

**இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!**

2) ஏழைகளின் சிறிய சகோதரிகள் தங்களுடைய முதியோர் இல்லக் காப்பகத்திற்காக நிதி திரட்ட வருகின்ற 22/23 செப்டம்பர் மாதம் நம் பங்கிற்கு வருகை தர இருக்கிறார்கள். அவர்களுக்கு நம்முடைய ஆதரவை வழங்குவோம்.

3) மலேசிய தினத்தை முன்னிட்டு 16-09-2018 (ஞாயிறு) ஆலய அலுவலகம் மூடப்பட்டிருக்கும்

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்**
அந்தோனி தாஸ் இறப்பு: 12/09/18
**முடிவில்லாத ஒளி இவர் ஒளிர்வதாக!**

- **மூன் கேக் கொண்டாட்டம் (முதுவேனில் கொண்டாட்டம்)** : 22-09-2018 (சனிக்கிழமை) மாலை 7 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். அனைவரும் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுடனும் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.
- **திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:** படிவத்தில் உங்களுடைய விவரங்களை முதலில் பதிவு செய்தபின் பங்கு குருவானவரைச் சந்தியுங்கள். (குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்னர்) கடைசி நேர திட்டமிடலை தவிருங்கள்.
- **ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்க உதவுங்கள்:** சுவர்களில் ஆணி அடிப்பது, பசை விளம்பரங்கள் ஒட்டுவது ஆகியவை அனுமதிக்கப்படாது. இறைவன் வாழும் இல்லமாகிய ஆலயத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டியது நம் அனைவரின் கடமை,
- **திருப்பலிக்கு முறையான உடையணிதல்** : பங்கு மக்கள் பொறுப்பாளர்கள், திருப்பலியில் பணி செய்பவர்கள் அனைவரும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு வரும்பொழுது முறையாகவும் பொருத்தமாகவும் உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச புனித ரோபர்ட் குடும்ப வாழ்வுப் பணிக்குழுவிற்கு நமது நன்றிகள்

- **ஒற்றுமை நடை** - தேசிய தினத்தை முன்னிட்டு அனைத்து சமயங்களைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொள்ளும் நிகழ்வு - நெகிரி மாநிலஅனைத்து சமயங்களுக்கிடையிலான பணிக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறும் இதில் நெகிரி மாநில ஆட்சி மன்ற உறுப்பினர் மாண்புமிகு அருள் மற்றும் நெகிரி மாநில ஒற்றுமை நிர்வாகத்தினர் பங்கு கொள்கின்றனர். அனைவரையும் இதில் கலந்துகொள்ள அழைக்கிறோம். (சனி 22-09-2018 காலை 7.45 சிரம்பான் லேக் கார்டன்,) தொடர்புக்கு: கிறிஸ்டோபர் கிறிஸ்னன் 019- 6216194. முன்பதிவு செய்தவர்கள் உங்களுக்கான சட்டையை (t-shirt) 20ம் 21ம் (வியா & வெள்ளி) திகதிகளில் காலை திருப்பலிக்கு பின்னரும் (காலை 7.30 – 8.00), மாலை 5.30 – 7.30 மணிக்கு முன்னரும் ஆலய உணவு விடுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
- **ஏழைகளுக்கான பணிக்குழு** (ஏழைகளின் ஆலயம், ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்)

**ஏழைகளுக்கான பணிக்குழு**

- பணிக்குழுவினரை ஆசீர்வதித்தல்- பணிக்குழுவை நியமித்தல் 22/23 செப்டம்பர்
- அக்டோபர் மாதத்தில் மருத்துவ முகாம்
- ஆன்மக சொற்பொழிவு - திருச்சபை ஏழைகளுக்கானது - உரை வழங்குபவர்: அருள்திரு சேவியர் அண்ட் ரூ நாள்: 08-11-2018 (அனைவருக்கும்)
- உலக ஏழையர் தினம் (18-11-2018)

தொடர்புக்கு: ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016-611 0681)

- **புனித மேரி கிண்டர்கார்டன் பாலர் பள்ளிக்கான சின்னம் வரையும் போட்டி** - ஜலான் லீ சாம் அனைத்து மறைக்கல்வி மாணவர்களையும் இதில் கலந்து கொள்ள அழைக்கின்றோம். இதற்கான விண்ணப்ப படிவங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இறுதி நாள்: 16-09-2018
- 04-10-2018(வியாழக்கிழமை) மாலை 7.00 மணிக்கு செராஸ், புனித பிரான்சிஸ் அசிசியாரின் புதிய ஆலயம் அர்ப்பணப் பெருவழா. புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழா மற்றும் அருள்திரு போல் சியாங் ( கப்பூச்சியன்) அவர்களின் குருத்துவ வெள்ளி விழா நிறைவு விழா.
- 170 ஆம் ஆண்டு நிறைவுவிழா - காா்னர் ஸ்டோன் "காஃபி டேபிள் புத்தகம் விலை: ரிம:40.00 மட்டுமே. அனைத்து திருப்பலிகளுக்குப் பின்னும் மற்றும் பங்கு அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்,
- **கணினி அனுபவமுள்ளவர்கள் தேவை** : தமிழ் திருப்பலி நேரத்தில் LCD இயக்க கணினி அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகிறார்கள். தொடர்புக்கு : பங்கு அலுவலகம் அல்லது கப்ரியேல் : 010 367 6954 / டேவிட் அலிமுத்து 013 932 6747

- **இல்லத்தில் இருக்கும் நோயாளிகளுக்கு நற்கருணை வழங்குதல்:**
  - அனைத்து நற்கருணைப் பணியாளர்களும் உங்கள் அதிச/வட்டாரத்தில் உள்ள நோயாளிகளுக்கு நற்கருணை வழங்கவேண்டும். விவரங்கள் அடிக்கடி புதுப்பிக்கப்பட வேண்டும்.
  - நோயாளிகளுக்கு வாரத்திற்கு ஒரு முறை நற்கருணை வழங்க வேண்டும்.
  - அதிச/குடும்பத்தினர் தங்கள் வீட்டில் /மருத்துவமனைகளில் நோயாளிகள் இருந்தால் அதை முறையே பங்கு அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டியது குடும்பத்தினரின் கடமை
  - அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப் போகின்றீர்கள் என்றால் உடனடியாக குருவானவரைச் சந்திக்கவும்.
- சோய்ஸ்(ஆங்கிலம்) கோலாலம்பூர் ( 05-07 அக்டோபர் - வெள்ளி-ஞாயிறு) choiceklrecruitment@gmail.com
- குருவானவர்கள் தங்கள் தியானத்தில் பங்கேற்க இருக்கிறார்கள்:
  அருள்திரு. ஜோர்ஜ் ஹாரிசன்: 16-21 செப்டம்பர் 2018 (ஜோகூர்)
  அருள்திரு. சேவியர் அண்ட்ரூ : 23-28 செப்டம்பர் 2018 (கேமரன் ஹைலண்ட்)
- குடியேற்றவாசிகளின் ஞாயிறு: 30-09-2018 - திருப்பலி பகல் 1.00 மணி. திருப்பலிக்குப் பின் உணவு உபசரிப்பு நடைபெறும்.